JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date: 05.02.2024 P.W.2

பெயர் : திரு. பூமணி
தந்தை /கணவர் பெயர் : செல்லக்கண்ணன்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 5th day of February 2024

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

1. நான் காவல் துறையில் பணி புரிந்து வந்தேன் என்றால் சரிதான். தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் விருப்பு ஓய்வில் வந்தேன் என்றால் சரிதான். என் மகள் மெர்லினுடைய திருமணத்திற்கு பணம் தேவைப்பட்டதால் 31.05.2017ம் தேதி அ ன்று விருப்பு ஓய்வு பெற்றேன். என்னுடைய இரண்டு மகள்களும் இரட்டையர்கள் என்றால் சரிதான். இரண்டு மகள்களுக்கும் ஒரே நாளில் நிச்சயிதார்த்தம் நடைபெற்றது என்றால் சரிதான். முதல் மகள் மெர்லினுடைய நிச்சிதார்த்தம் நடைபெற்றது ஆனால் திருமணம் தடைபெற்றது என்றால் சரிதான், அந்த நபர் குடித்துக்கொண்டியிருந்ததால் அதை பார்த்து நான் திருமணத்தை நிறுத்திவிட்டேன். 2வது மகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். முதல் மகளின் திருமணம் முதல் எதிரியுடன் எப்பொழுது நிச்சயிக்கப்பட்டது என்றால் சுமார் 13.12.2017ம் தேதி 1ம் எதிரியுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மேற்படி நிச்சயித்தார்த்தமானது எங்களுடைய வீட்டு மாடியில் எளிமையான முறையில் நடைபெற்றது என்றால் சரிதான்.

2. முதல் எதிரி எனக்கு எவ்வாறு அறிமுகமானார் என்றால் முதலில் திருமணத்திற்காக பார்த்துக்கொடுத்த புரோக்கர் மூலமாக அறிமுகமானார். நிச்சயித்தார்த்ததில் பணம் கொடுத்ததற்கான ஆதாரம் ஏதேனும் நான் விசாரணையில் கொடுத்தேனா என்றால் 1ம் எதிரியும் 2ம் எதிரியும் ரூ.8,00,000 பெற்றுக்கொண்டதற்கான அவர்கள் பேசிய உரையாடல்களை போலீஸ் விசாரணையில் வாயிஸ் ரெக்கார்டை 65பி சான்றிதழ்யுடன் இணைத்து கொடுத்துள்ளேன். நான் கூறிய வகையில் பணம் ஏதும் எதிரிகளுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணம் நடைபெற்ற பிறகு என்னுடைய மகளும் 1ம் எதிரியும் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் கூறுவது பொய் என்றாலும் 1ம் எதிரியும் என்னுடைய மகளும் தனிக்குடித்தனம் வாழ்ந்து வந்து விருகம்பாக்கத்தில் இருந்தார்கள் என்றாலும் 2ம் எதிரி வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான், 2ம் எதிரி வீட்டில் தான் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தார்கள். என்னுடைய மகளுக்கு குழந்தை பிறந்த பின்னர் எதிரிகள் யாரேனும் வந்து பார்த்தார்களா என்றால் 1வது எதிரியை தவிர மற்ற எதிரிகள் யாரும் வந்து பார்க்கவில்லை.

3. 2வது எதிரி மருத்துவமனை பார்த்தார் என்றாலும் குழந்தை பிறந்ததற்கு பின்னர் மருந்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur

//True Copy//

Judicial Magistrate,
Ambattur